| Provisional | தற்காலிகமான |
| Public | பொது |
| Public servant | அரசு அலுவலர் |
| Public utilities | பொது பயனுடைய பணிகள் |
| Punishable | தண்டனைக்குரிய |
| Purchase | கொள்முதல் |
| Pure agent | அசல்முகவர் |
| Quarterly return | காலாண்டு அறிக்கை |
| Radio frequency identification device | வானொலி அதிர்வெண் அடையாள சாதனம் |
| Railways | இருப்பூர்தி |
| Rate | விகிதம் |
| Rate of tax | வரி விகிதம் |
| Raw material | மூலப்பொருள் |

| | |
|---|---|
| Real time gross settlement | உடனடி நேர மொத்தப் பண வழங்கல் |
| Reappointment | மறு அமர்த்துகை |
| Reason to believe | நம்புவதற்குரிய காரணம் |
| Re-assessment | மறு வரிக்கணிப்பு |
| Re-auction | மறு ஏலம் |
| Rebate | தள்ளுபடி |
| Receipt | ரசீது |
| Receiver | பெறுநர் |
| Receptacle | கொள்கலன் |
| Recipient | பெற்றுக்கொள்பவர் |
| Reconciliation statement | இணக்க விவர அறிக்கை |
| Reconditioning | மீண்டும் சரி செய்தல் |
| Reconstitution | மறு அமைப்பு |
| Records | பதிவுருக்கள் |
| Recoverable | வசூல் செய்யப்படவேண்டிய |
| Recovery | வசூல் |
| Rectification | திருத்தி அமைத்தல் |
| Recurrent | மறுபடியும் நிகழ்தல் |
| Redemption | மீட்பு |

| | |
|---|---|
| Reference number | சுட்டுகை எண் |
| Refrain | செய்யாமல் இருத்தல் |
| Refund | திருப்பிக் கொடுத்தல் |
| Regional benches | வட்டார நீதியர் ஆயம் |
| Registered post | பதிவு தபால் |
| Registrar | பதிவாளர் |
| Registration | பதிவு செய்தல் |
| Rejected | மறுக்கப்படுதல் |
| Related persons | தொடர்புடைய நபர்கள் |
| Released | விடுவிக்கப்பட்ட |
| Relevant period | தொடர்புற்ற கால அளவு |
| Remodelling | மாற்றியமைத்தல் |
| Removal | நீக்குதல் |
| Remuneration | பணி ஊதியம் |
| Rental | வாடகைக்கு |
| Repair | பழுது பார்த்தல் |
| Repealed acts | நீக்கறவு செய்யப்பட்ட சட்டங்கள் |
| Replacements | மாற்றிக்கொடுத்தல் |
| Repossessed | மீண்டும் உரிமையாக்கிய |

| | |
|---|---|
| Representation | விண்ணப்பம் |
| Representative | பிரதிநிதி |
| Rescinded | ரத்து செய்தல் |
| Reserve Bank of India | இந்திய ரிசர்வ் வங்கி |
| Residential complex | குடியிருப்பு வளாகம் |
| Residual method | எஞ்சியுள்ள முறை |
| Respondent | எதிராளி |
| Restoration of appeal | மேல் முறையீட்டை மீட்டல் |
| Retained | நிறுத்தி வைக்கப்பட்ட |
| Retire | ஓய்வுபெறுதல் |
| Retirement | ஓய்வு |
| Retrospective date | முன்நாளிட்ட தேதி |
| Return | அறிக்கை |
| Returned | திருப்பி கொடுக்கப்பட்ட |
| Revenue authority | வருவாய் அதிகார அமைப்பு |
| Reversal | எதிர்மாறாக்குதல் |
| Reverse charge | எதிரிடைக் கட்டணம் |
| Review | மறுஆய்வு |
| Revised | திருத்தியமைக்கப்பட்ட |

| | |
|---|---|
| Revised invoice | திருத்தியமைக்கப்பட்ட விலைப்பட்டி |
| Revocation | திரும்பப் பெறுதல் |
| Right | உரிமை |
| Rule | விதி |
| Safeguards | பாதுகாப்பு |
| Sale | விற்பனை |
| Sales tax | விற்பனை வரி |
| Samiti | குழு |
| Samples | மாதிரிகள் |
| Savings | சேமிப்புகள் |
| Schedule | இணைப்புப் பட்டியல் |
| Scheduled caste | பட்டியலிடப்பட்ட சாதி |
| Scheduled tribe | பட்டியலிடப்பட்ட பழங்குடி |
| Scheme | திட்டம் |
| Scope of supply | வழங்குகையின் வீச்சு |
| Scrap | பயனற்ற பொருள் |
| Screening committee | பிரித்தறியும் குழு |
| Scrutiny | கூர்ந்தாய்வு |
| Sea bed | கடல் படுகை |

| | |
|---|---|
| Seal | முத்திரை |
| Search | தேடுதல் |
| Second hand goods | பயன்படுத்தப்பட்ட சரக்குகள் |
| Second stage dealer | இரண்டாம் நிலை வணிகர் |
| Secretary | செயலாளர் |
| Secreted | மறைத்துவைக்கப்பட்ட |
| Securities | காப்புறுதிகள் |
| Seizure | கைப்பற்றுதல் |
| Selection committee | தேர்வுக்குழு |
| Self-assessed | சுயமதிப்பீடு செய்யப்பட்ட |
| Selling price | விற்பனை விலை |
| Semi knocked down | பாதி பிரிக்கப்பட்ட |
| Semi-finished | பகுதி முடிக்கப்பட்ட |
| Service distributor | சேவை விநியோகிப்பவர் |
| Service tax | சேவை வரி |
| Service tax identification number | சேவை வரி அடையாள எண் |
| Services | சேவைகள் |
| Settlement | தீர்வு |
| Shares | பங்குகள் |

| | |
|---|---|
| Shipping bill | கப்பற்சரக்கனுப்பீடு இரசீது |
| Short-paid | குறைவாகச் செலுத்தியது |
| Show cause notice | காரணம் காட்டுமாறு கோரும் அறிவிப்பு |
| Signatory | கையொப்பக்காரர் |
| Signature | கையொப்பம் |
| Simplified Registration Scheme | எளிதாக்கப்பட்ட பதிவு திட்டம் |
| Society | சமுதாயம் |
| Software | மென்பொருள் |
| Sole agent | முழு முகவர் |
| Sound mind | தெளிவான மனநிலை |
| Special audit | சிறப்பு தணிக்கை |
| Special category states | சிறப்பு வகை மாநிலங்கள் |
| Special economic zone | சிறப்புப் பொருளாதார மண்டலம் |
| Specific order | குறிப்பிட்ட ஆணை |
| Specified | குறிப்பிடப்பட்ட |
| Speed post | விரைவு தபால் |
| Stamp | முத்திரை |
| Standing committee | நிலைக்குழு |
| State | மாநிலம் |

| | |
|---|---|
| State Bench | மாநில நீதியர் ஆயம் |
| State Code | மாநிலத் தொகுப்பு |
| State Goods and Services Tax | மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரி |
| State Tax | மாநில வரி |
| Statement | விவரவுரை |
| Statement of Accounts | கணக்குகளின் விவரங்கள் |
| Statistics | புள்ளிவிவரங்கள் |
| Stayed | நிறுத்திவைக்கப்பட்ட |
| Stock | சரக்கு இருப்பு |
| Stock Broking | பங்குத் தரகர் |
| Storage | சரக்கு சேமிக்குமிடம் |
| Submission | சமர்ப்பித்தல் |
| Subordinate | கீழ்நிலையில் உள்ள அலுவலர் |
| Sub-registrar | சார்பதிவாளர் |
| Subsidy | மானியம் |
| Sub-soil | ஆழ் அடி மண் |
| Substantial question of law | சாரமான சட்டப் பிரச்சனை |
| Successive | அடுத்தடுத்த |
| Sufficient cause | போதுமான காரணம் |

| | |
|---|---|
| Suit | வழக்கு |
| Summary assessment | சுருக்குமுறை வரிக்கணிப்பு |
| Summon | அழைப்பாணை |
| Suo moto registration | தானாக பதிவு செய்தல் |
| Supplier | வழங்குநர் |
| Supply | வழங்குகை |
| Suppressed | மறைக்கப்பட்ட |
| Supreme Court | உச்ச நீதி மன்றம் |
| Surcharge | மேல்வரி |
| Surety | பிணையதாரர் |
| Surplus | மிகை |
| Survey | நில அளவை |
| Tax | வரி |
| Tax collected at source | ஆதாரத்திலிருந்து வசூலிக்கப்படும் வரி |
| Tax deducted at source | ஆதாரத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும் வரி |
| Tax deduction and collection account number | வரி பிடித்தம் மற்றும் வசூல் கணக்கு எண் |
| Tax identification number | வரி அடையாள எண் |
| Tax invoice | வரி விலைப்பட்டியல் |
| Tax return preparer | வரி அறிக்கை தயாரிப்பவர் |

| | |
|---|---|
| Taxable | வரி விதிக்கத்தக்க |
| Taxable supplies | வரி விதிக்கத்தக்க வழங்குகைகள் |
| Taxdues | வரி நிலுவைகள் |
| Technical member | தொழில்நுட்ப உறுப்பினர் |
| Technical resources | தொழில்நுட்ப வளங்கள் |
| Telecom operator | தொலைத்தொடர்பு இயக்குபவர் |
| Telecommunication | தொலைத்தொடர்பு |
| Temporary | தற்காலிகம் |
| Tenancy | குத்தகையுரிமை |
| Territorial waters of India | இந்திய நாடு சார்ந்த கடற்பகுதிகள் |
| Territory | ஆட்சிப்பரப்பு |
| Test | ஆய்வு |
| Testing | ஆய்வு செய்தல் |
| Ticket | நுழைவுச்சீட்டு |
| Time | காலம் |
| Title | உரிமை |
| Token | அடையாளம் |
| Tolerate | சகித்துக்கொள்ளுதல் |
| Tools | கருவிகள் |

| | |
|---|---|
| Total turnover | மொத்த விற்பனை அளவு |
| Totalisator | பதிவு செய்யும் கருவி |
| Trade | வணிகம் |
| Transaction value | பரிவர்த்தனையின் மதிப்பு |
| Transactions | பரிவர்த்தனைகள் |
| Transfer | உரிமை மாற்றம் |
| Transferee | உரிமை மாற்றம் பெற்றவர் |
| Transit | போக்குவரத்து |
| Transitional provisions | மாறுதற்கால வகைமுறைகள் |
| Transmission | கொண்டு செல்லும் |
| Transport authority | போக்குவரத்து அமைப்பு |
| Transporter | ஏற்றிச் செல்பவர் |
| Treatment | செயல்பாடு |
| Trial balance | ஐந்தொகை |
| Triplicate | மூன்றுபடி |
| Trust | அறக்கட்டளை |
| Trustee | அறங்காவலர் |
| Turnover | விற்பனை அளவு |
| Unavailed | துய்க்கப்படாத |

| | |
|---|---|
| Undivided share | பிரிக்கப்படாத பங்கு |
| Undue or excess | தகாத அல்லது மிகையான |
| Unincorporated association | கூட்டுருமமாகப் பதிவு செய்யப்பட்ட கழகம் |
| Union territory | யூனியன் பிரதேசம் |
| Union territory tax | யூனியன் பிரதேச வரி |
| Unique enrolment number | தனித்த பெயர்ப்பதிவு எண் |
| Unique identity number | தனித்த அடையாள எண் |
| Unique quantity code | தனித்த அளவுக் குறியீடு |
| Unit | பிரிவு |
| United Nations Organisation | ஐக்கிய நாடுகள் அமைப்பு |
| University | பல்கலைக்கழகம் |
| Unreasonable | காரணம் இல்லாமல் |
| Unregistered person | பதிவுபெறாத நபர் |
| Un-utilized credit | பயன்படுத்தப்படாத வரவு |
| Used goods | பயன்படுத்தப்பட்ட சரக்குகள் |
| Valid | செல்லத்தக்க |
| Validate | செல்லுந்தன்மையாக்குதல் |
| Validity | செல்லுந்தன்மை |
| Valuable | மதிப்புடைய |

| | |
|---|---|
| Value added tax | மதிப்புக் கூட்டு வரி |
| Verification | சரிபார்த்தல் |
| Vice-chairman | துணைத்தலைவர் |
| Village | கிராமம் |
| Vocation | வாழ்தொழில் |
| Void | இல்லாநிலை |
| Voluntarily | தன்னிச்சையாக |
| Voucher | செலவுச்சீட்டு |
| Wager | பகடைப்பந்தயம் |
| Wages | கூலி |
| Warehouse | பண்டகசாலை |
| Wastage | கழிவு |
| Waste | பயனற்றவை |
| Wholly dependent | மொத்தமாகச் சார்ந்துள்ள |
| Wholly exempt | மொத்தமாக விலக்களிக்கப்பட்ட |
| Wilful | வேண்டுமென்று |
| Withdrawal | திரும்பப்பெறல் |
| Witness | சாட்சி |
| Women | மகளிர் |


| | |
|---|---|
| Working days | வேலை நாட்கள் |
| Works contract | பணி ஒப்பந்தம் |
| Wound up | கலைத்தல் |
| Written off | தள்ளுபடி |
| Wrongly availed | தவறுதலாகத் துய்க்கப்பட்ட |
| Zero-rated supply | பூஜ்ய வீத வழங்குகை |
| Zila parishad | மாவட்ட மன்றம் |






P.Velraj, Government College of Fine Arts, Chennai

P.வேல்ராஜ், அரசு கலைக்கல்லூரி, சென்னை.




K. Bhavani, Government College of Fine Arts, Chennai
K.பவானி, அரசு கலைக்கல்லூரி, சென்னை.

# List of Acts

LEXICON | அகராதி

| | |
|---|---|
| Additional Duties of Excise (Goods of Special Importance) Act, 1957 | கூடுதல் ஆயத்தீர்வை (சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்த பொருட்கள்) சட்டம், 1957 |
| Additional Duties of Excise (Textile and Textile Articles) Act, 1978 | கூடுதல் ஆயத்தீர்வை (துணி மற்றும் துணிப் பொருட்கள்) சட்டம், 1978 |
| Architects Act, 1972 | கட்டடக் கலைஞர்கள் சட்டம், 1972 |
| Central Excise Act, 1944 | மத்திய கலால் வரிச்சட்டம், 1944 |
| Central Excise Tariff Act, 1985 | மத்திய கலால் வரிக் கட்டண சட்டம்,1985 |
| Central Goods and Services Tax Act, 2017 | மத்திய சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017 |
| Central Goods and Services Tax Rules, 2017 | மத்திய சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகள், 2017 |

| | |
|---|---|
| CENVAT Credit Rules, 2004 | மத்திய மதிப்புக்கூட்டு வரி வரவு விதிகள், 2004 |
| Code of Civil Procedure, 1908 | உரிமையியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1908 |
| Code of Criminal Procedure, 1973 | குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம்,1973 |
| Companies Act, 2013 | நிறுமங்கள் சட்டம், 2013 |
| Customs Act, 1962 | சுங்கவரிச் சட்டம், 1962 |
| Customs Tariff Act, 1975 | சுங்கவரி கட்டண சட்டம், 1975 |
| Depositories Act, 1996 | வைப்புத் தொகையம் சட்டம்,1996 |

| | |
|---|---|
| Electricity Act, 2003 | மின்சார சட்டம், 2003 |
| Finance Act, 1994 | நிதிச்சட்டம்,1994 |
| Finance Act, 2001 | நிதிச்சட்டம், 2001 |
| Goods and Services Tax (Compensation to States) Act, 2017 | சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் (மாநிலங்களுக்கு உரிய இழப்பீடு) சட்டம், 2017 |
| Income Tax Act, 1961 | வருமான வரிச் சட்டம், 1961 |
| Indian Evidence Act, 1872 | இந்திய சான்று சட்டம், 1872 |
| Industrial Disputes Act, 1947 | தொழில் தகராறுகள் சட்டம், 1947 |

## LEXICON | அகராதி

| | |
|---|---|
| Information Technology Act, 2000 | தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2000 |
| Insolvency and Bankruptcy Code, 2016 | நொடிப்புநிலை மற்றும் வணிகர் நொடிப்புநிலைத் தொகுப்பு சட்டம், 2016 |
| Integrated Goods and Services Tax Act, 2017 | ஒருங்கிணைக்கப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017 |
| Limited Liability Partnership Act, 2008 | வரையறுக்கப்பட்ட கட்டுப்பாட்டுக் கூட்டாண்மைச் சட்டம், 2008 |
| Medicinal and Toilet Preparations (Excise Duties) Act,1955 | மருத்துவ மற்றும் கழிவறைத் தயாரிப்புகள் (கலால் வரிகள்) சட்டம், 1955 |
| Motor Vehicles Act, 1988 | இயக்கூர்திகள் சட்டம்,1988 |
| Prevention of Corruption Act, 1988 | ஊழல் தடுப்புச் சட்டம், 1988 |


# LEXICON

# அகராதி

| | |
|---|---|
| Registration Act, 1908 | பதிவுச் சட்டம்,1908 |
| Reserve Bank of India Act, 1934 | இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டம், 1934 |
| Right to Fair Compensation and Transparency in Land Acquisition, Rehabilitation and Resettlement Act, 2013 | நியாயமான நஷ்ட ஈட்டைப் பெறுவதற்கான உரிமை மற்றும் நிலத்தைக் கையகப் படுத்துவதில் ஒளிவு மறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்த்தச் சட்டம், 2013 |
| Securities Contracts (Regulation) Act, 1956 | காப்புறுதிகள் ஒப்பந்தங்கள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டம், 1956 |
| Special Economic Zone Act, 2005 | சிறப்புப்பொருளாதார மண்டலச் சட்டம், 2005 |
| State Goods and Services Tax Act, 2017 | மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017 |
| Union Territory Goods and Services Tax Act, 2017 | யூனியன் பிரதேச சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017 |



M. Hariharan, Government College of Fine Arts, Chennai
M.ஹரிஹரன், அரசு கலைக்கல்லூரி, சென்னை.




R. Harees Kumar, Government College of Fine Arts, Chennai
R.ஹரீஸ் குமார், அரசு கலைக்கல்லூரி, சென்னை.

# சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (GST) பற்றி அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQs)

**கேள்வி 1: எந்தெந்த பொருட்களைச் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிக்கு வெளியில் இருந்து கண்காணிக்க வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டுள்ளது?**

பதில்: 101-வது அரசியலமைப்பு திருத்த சட்டம் 2016-ன்படி திருத்தியமைக்கப்பட்ட 366(12A) அரசியலமைப்பு உறுப்பு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி பற்றி விளக்குகின்றது. அதன்படி, மனித நுகர்வுக்கான மதுபான வழங்குகை தவிர சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இரண்டின் வழங்குகை மீதான வரி என்று விளக்கப்படுகின்றது. எனவே, அரசியலமைப்பிலுள்ள சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் விளக்கத்தின்படி மனித நுகர்வுக்கான மதுபானம் சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் வரையறைக்கு அப்பாற்பட்டது. செம்மையாக்கப்படாத பெட்ரோலியம், மோட்டார் சாராவி (பெட்ரோல்), உயர் வேக டீசல், இயற்கை எரிவாயு மற்றும் வானூர்தி இயக்க எரிபொருள் ஆகிய ஐந்து பெட்ரோலியப் பொருட்களும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிக்கு வெளியில் தற்காலிகமாக வைக்கப்பட்டுள்ளன மற்றும் இவற்றின் வழங்குகை எந்த தேதியிலிருந்து சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிப்பிற்கு உட்படும் என்பதை மன்றத்தின் பரிந்துரையின் பேரில் அரசு அறிவிக்கும். மேலும், மின்சாரமும் சரக்குள் மற்றும் சேவைகள் வரியிலிருந்து வெளியேற்றப்பட்டுவிட்டது.

**கேள்வி 2: சரக்குகள் மற்றும் சேவைகள் வரி செலுத்துவதற்குரிய கடப்பாடு எப்பொழுது தோன்றுகிறது?**

பதில்: 12 மற்றும் 13-ஆம் பிரிவின் கீழ் சரக்குகள் மற்றும் சேவைகளின் பேரில் வரி செலுத்துவதற்குரிய கடப்பாடு, முறையே இப்பிரிவுகளின் வகைமுறைகளுக்கு இணங்க தீர்மானிக்கப்படுகிற வழங்குகை காலத்தின் போது தொடங்குதல் வேண்டும்.

**கேள்வி 3: உள்ளீட்டு வரி என்றால் என்ன?**

பதில்: பதிவு பெற்ற நபர் தொடர்பாக ‘‘உள்ளீட்டு வரி’’ என்பது அவருக்கு மேற்கொள்ளப்பட்ட சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இரண்டின் வழங்குகை எதன் மீதும் விதிக்கப்படும் மைய வரி, மாநில வரி, ஒருங்கிணைக்கப்பட்ட வரி அல்லது யூனியன் பிரதேச வரி என்று பொருள்படும் மற்றும் கீழ்க்கண்டவற்றை உள்ளடக்கும்-

அ) சரக்குகளின் இறக்குமதியின் மீது விதிக்கப்படும் ஒருங்கி--ணைக்கப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகள் வரி,

ஆ) 9-ஆம் பிரிவின் (3) மற்றும் (4)-ஆம் உட்பிரிவுகளின் வகை--முறைகளின் கீழ் செலுத்தத்தக்க வரி,

இ) ஒருங்கிணைக்கப்பட்ட சரக்குகள் மற்றும் சேகைள் வரிச் சட்டத்தின் 5-ஆம் பிரிவின் (3) மற்றும் (4)-ஆம் உட்பிரிவுகளின் வகை--முறைகளின் கீழ் செலுத்தத்தக்க வரி,

ஈ) மைய சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் 9-ஆம் பிரிவின் (3) மற்றும் (4)-ஆம் உட்பிரிவுகளின் வகைமுறைகளின் கீழ் செலுத்தத்தக்க வரி. ஆனால், இணக்க வரிவிதிப்பின் கீழ் செலுத்--தப்பட்ட வரியை உள்ளடக்காது.

**கேள்வி 4: உள்ளீட்டு வரி வரவினை எடுப்பதற்கான நிபந்தனைகள் யாவை?**

பதில்: பதிவு பெற்ற நபர் எவரும், அவருக்கு செய்யப்படும் சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இரண்டின் வழங்குகை

எதனையும் பொறுத்த உள்ளீட்டு வரி எதனின் வரவுக்குப் பின் வருவனவற்றைப் பொறுத்துத் தகுதி உடையவராவார்.

அ) அவர், இந்த சட்டத்தின் கீழ் பதிவு பெற்ற வழங்குநரால் வழங்கப்பட்ட பற்றுக் குறிப்பினை அல்லது வரி விலைப்பட்டியல் ஒன்றினை அல்லது வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய பிற வரி செலுத்துகை ஆவணங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஆ) அவர், சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இரண்டி-னையும் பெற்றிருந்திருக்க வேண்டும்.

இ) அத்தகைய வழங்குகை பொறுத்து விதிக்கப்படும் வரி, அரசுக்கு, ஒன்று ரொக்கமாகவோ அல்லது மேற்சொன்ன வழங்குகை பொறுத்து அனுமதிக்கத்தக்க உள்ளீட்டு வரி வரவைப் பயன்படுத்துவதன் மூலமாகவோ உள்ளபடியே செலுத்தப்பட்டு இருக்க வேண்டும்.

ஈ) அவர் 39-ஆம் பிரிவின் கீழ் அறிக்கை அளித்திருக்க வேண்டும்.

## கேள்வி 5: கட்டாயப் பதிவு செய்ய வேண்டிய நேர்வுகள் யாவை?

பதில்: 22-ஆம் பிரிவின் (1)-ஆம் உட்பிரிவில் என்ன அடங்கியிருந்த போதிலும், பின்வரும் நபர்களின் வகையினர் இந்தச் சட்டத்தின் கீழ் பதிவு பெறுவதற்கு வேண்டுறுத்தப்படுதல் வேண்டும்,

i) மாநிலங்களுக்கு இடையேயான வரி விதிக்கத்தக்க வழங்குகை எதுவும் செய்யும் நபர்கள்;

ii) வரி விதிக்கத்தக்க வழங்குகையினைச் செய்கிற தற்செயல் வரி விதிக்கத்தக்க நபர்கள்;

iii) எதிரிடைக் கட்டணத்தின் கீழ் வரி செலுத்தும்படி வேண்டு-றுத்தப்படும் நபர்கள்;

iv) 9-ஆம் பிரிவின் (5)-ஆம் உட்பிரிவின் கீழ் வரி செலுத்தும் படி வேண்டுறுத்தப்படும் நபர்;

v) வரி விதிக்கத்தக்க வழங்குகையினைச் செய்கிற குடியிராத வரி விதிக்கத்தக்க நபர்கள்;

vi) இந்தச் சட்டத்தின் கீழ் தனியாகப் பதிவு செய்யப்பட்டிருப்பினும் அல்லது இல்லாவிடினும் 51-ஆம் பிரிவின் கீழ் பிடித்தம் செய்ய வேண்டுறுத்தப்படுகிற நபர்கள்;

vii) பிற வரி விதிக்கத்தக்க நபர்கள் சார்பாக ஒரு முகவராகவோ அல்லது பிறவாறாகவோ சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இரண்டின் வரி விதிக்கத்தக்க வழங்குகையினைச் செய்கிற நபர்கள்;

viii) இந்தச் சட்டத்தின் கீழ் தனியாகப் பதிவு செய்யப்பட்டு இருப்பினும் அல்லது இல்லாவிடினும் உள்ளீடு சேவை விநியோகிப்பவர்.

ix) 52-ஆம் பிரிவின் கீழ் மூலத்தில் வரி வசூலிக்க வேண்டுறுத்தப்பட்டிருக்கும் அத்தகைய மின்னணு வணிகம் இயக்குபவர் மூலமாக, 9-ஆம் பிரிவின் (5)-ஆம் உட்பிரிவின் கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ள வழங்குகைகள் அல்லாத பிற சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இரண்டினை வழங்கும் நபர்கள்.

x) மின்னணு வணிகம் இயக்குபவர் ஒவ்வொருவரும்;

xi) பதிவு பெற்ற நபர் அல்லாத, இந்தியாவுக்கு வெளியே உள்ள ஓர் இடத்திலிருந்து இந்தியாவிலுள்ள ஒரு நபருக்கு மின்னணு தகவல்கள் மற்றும் தகவல் தள அணுகல் அல்லது தகவல் மீட்புச் சேவைகள் வழங்கும் நபர் ஒவ்வொருவரும் மற்றும்

xii) மன்றத்தின் பரிந்துரைகளின் பேரில் அரசினால் அறிவி--க்கை செய்யப்படலாகும் அத்தகைய பிற நபர் அல்லது நபர்களின் வகையினர்.

**கேள்வி 6: சரக்குகள் மற்றும் சேவைகள் வரி கடப்பாடில்லாத நபர் தன்னிச்சையாகப் பதிவு செய்து கொள்ளும் வகைமுறை உள்ளதா?**

பதில்: ஆம், சட்டப்பிரிவு 25ன் உட்பிரிவு (3)ன் நியதிகளின் படி 22-ஆம் பிரிவின் கீழோ அல்லது 24-ஆம் பிரிவின் கீழோ பதிவு பெறுவதற்குக் கடப்பாடற்ற போதிலும், நபர் ஒருவர் தாமே தம் விருப்பமாகப் பதிவு பெறலாம், மற்றும் இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் அனைத்தும், பதிவு பெற்ற நபர் ஒருவருக்குப் பொருந்துகிறவாறு, அத்தகைய நபருக்கும் பொருந்துதல் வேண்டும். பதிவு பெறுவதற்குக் கடப்பாடற்ற நபர் பிரிவு 22-ன் கீழ் தன்னிச்சையாகப் பதிவு பெற்றுக் கொள்ள முடியும்.

**கேள்வி 7: பதிவு சான்றிதழை ரத்து செய்ய அனுமதிக்கப்படுமா?**

பதில்: ஆம், ரத்து செய்ய முடியும். இந்தச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பதிவினை உரிய அலுவலர் 29-ஆம் பிரிவின் கீழ் குறிப்பிட்டுள்ள நேர்வுகளின் சூழ்நிலைகளில் ரத்து செய்யலாம்.

உரிய அலுவலர், தாமே முற்பட்டோ அல்லது பதிவு பெற்ற நபரால் அல்லது அத்தகைய நபரின் இறப்பின் நேர்வில் அவருடைய சட்டப்படியான உரிமையுடையவரால் முன்னிடப்படும் விண்ணப்பம் ஒன்றின் பேரிலோ,-

அ) வணிகமானது, உரிமையாளரின் இறப்பு, பிற சட்டமுறை நிறுவனத்துடன் ஒருங்கிணைப்பு, பிரிப்பு அல்லது பிறவாறான தீர்வு உள்ளடங்கலான காரணம் எதற்காகவும் முழுவதுமாக நிறுத்தப்பட்டோ, மாற்றப்பட்டோ இருக்கிற; அல்லது

ஆ) வணிகத்தின் அமைப்பில் உள்ள மாற்றம் எதுவும் இருக்கிற; அல்லது

இ) 25-ஆம் பிரிவின் (3)-ஆம் உட்பிரிவின் கீழ் பதிவு பெற்ற நபராக அல்லாத பிற வரி விதிக்கத்தக்க நபர், 22-ஆம் பிரிவின் கீழோ அல்லது 24-ஆம் பிரிவின் கீழோ பதிவு பெறுவதற்கு இனிமேலும் உள்ளாகாத,

நேர்வுகளின் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு,

வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையிலும் மற்றும் அத்தகைய கால அளவிற்குள்ளும், பதிவினை ரத்து செய்யலாம்.

**கேள்வி 8: சரக்குகள் மற்றும் சேவைகள் வரி பதிவினைத் தன்னிச்சையாக உரிய அலுவலர் ரத்து செய்ய முடியுமா?**

பதில்: ஆம். சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017 பிரிவு 29(2)ன்படி உரிய அலுவலர்,

அ) பதிவு பெற்ற நபர் ஒருவர், வகுத்துரைக்கப்படலாகும் சட்டத்தின் வகைமுறைகளை அல்லது அதன் கீழ் செய்யப்பட்ட விதிகளை மீறியிருக்கிறார் என்ற; அல்லது

ஆ) 10-ஆம் பிரிவின் கீழ் வரி செலுத்தும் நபர் ஒருவர் தொடர்ச்சியாக மூன்று வரிக் காலங்களுக்கு அறிக்கைகள் அளிக்காதிருக்கிறார் என்ற; அல்லது

இ) (ஆ)-கூறில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒரு நபராக அல்லாத பிற, பதிவு பெற்ற நபர் எவரும், தொடர்ச்சியாக ஆறு மாதங்கள் கால அளவிற்கு அறிக்கைகள் அளிக்காமல் இருக்கிறார் என்ற; அல்லது

ஈ) 25-ஆம் பிரிவின் (3)-ஆம் உட்பிரிவின் கீழ் தம் விருப்பமாகப் பதிவு எடுத்திருக்கிற நபர் எவரும், பதிவு செய்த தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் வணிகத்தைத் தொடங்காதிருக்கிறார் என்ற அல்லது

உ) பதிவானது, மோசடியான வழியில், பொருண்மைகளை வேண்டுமென்றே தவறாகக் கூறியோ அல்லது மறைத்தோ பதிவு பெற்றிருக்கிறார் என்ற நேர்வில், தாம் பொருத்தமெனக் கருதுகிறவாறு, முன்மேவு தேதி எதுவும் உள்ளடங்கலான, அத்தகைய தேதியிலிருந்து ஒரு நபரின் பதிவினை ரத்து செய்யலாம். ஆனால், உரிய அலுவலர், நபருக்குக் கேட்கப்படுவதற்கான வாய்ப்பு ஒன்றைக் கொடுக்காமல் பதிவினை ரத்து செய்தல் ஆகாது.

**கேள்வி 9: பதிவு ரத்து ஆணையைத் திரும்பப் பெறுதல் சாத்தியமா?**

பதில்: ஆம். வகுத்துரைக்கப்படலாகும் நிபந்தனைகளுக்குட்பட்டு, உரிய அலுவலர் தாமே முற்பட்டு எந்தப் பதிவு பெற்ற நபரின் பதிவினை ரத்து செய்திருக்கிறாரோ அந்தப் பதிவு பெற்ற நபர் எவரும், ரத்து ஆணை சார்வு செய்யப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் வகுத்துரைக்கப்பட்ட முறையில் பதிவு ரத்தினைத் திரும்பப் பெறுவதற்காக அத்தகைய அலுவலரிடம் விண்ணப்பிக்கலாம். உரிய அலுவலர், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையிலும் மற்றும் அத்தகைய கால அளவிற்குள்ளும், ஆணை வழியாக, பதிவின் ரத்தினைத் திரும்பப் பெறலாம் அல்லது விண்ணப்பத்தை மறுக்கலாம். ஆனால், பதிவு ரத்தினைத் திரும்பப் பெறுவதற்கான விண்ணப்பமானது, விண்ணப்பதாரருக்குக் கேட்கப்படுவதற்கான வாய்ப்பு ஒன்று கொடுக்கப்பட்டிருந்தாலன்றி, ஏற்க மறுக்கப்படுதல் ஆகாது.

### கேள்வி 10: திருப்பிக் கொடுத்தலைக் கோருவதற்கான கால வரையறை யாது?

பதில் : வரி எதனையும் மற்றும் அத்தகைய வரி மீது செலுத்தப்பட்ட வட்டி, ஏதேனுமிருப்பின், அதனையும், அல்லது தம்மால் செலுத்தப்பட்ட பிற தொகை எதனையும் திருப்பிக் கொடுக்கக் கோரும் நபர் எவரும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்திலும் மற்றும் முறையிலும் தொடர்புற்ற தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் காலாவதியாவதற்கு முன்பு விண்ணப்பம் செய்யலாம்.

## என் நன்றிகளும் ஒப்புகைகளும்...

**A.S.ஜெகதீஸ்வரன்,** ஆய்வாளர், அவர்களுக்கு, மத்திய சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் மற்றும் விதிகள் ஆகியவற்றில் இருந்த ஆங்கில வார்த்தைகள் மற்றும் சொற்றொடர்களுக்கு நிகரான தமிழாக்கத்தினை மிகுந்த சிரத்தையுடனும் திறனுடனும் சேகரித்தமைக்காக.

**அபிஷேக் குமார்,** ஆய்வாளர், அவர்களுக்கு முன்மொழியப்பட்ட குறித்தத் தேதியிலும் நேரத்திலும் இவ்வகராதியை வெளியிடும் பொருட்டு வடிவமைப்பாளர் மற்றும் பதிப்பாளருடன் விடாது தொடர்பு கொண்டமைக்காக

**A.M.சித்ரா,** மற்றும்
**A . ஸ்டான்லி ஆரோக்கியராஜ்**
கண்காணிப்பாளர்கள் அவர்களுக்கு சிறிதும் தயக்கமின்றி மிகவும் துரிதமாய்ச் செயல்பட்டு முதனிலை வரைவினைச் சரிபார்த்துத் திருத்திக் கொடுத்தமைக்காக.

**M.K.மதிவாணன்,** மற்றும் **லீமா.P.ஜோஸ்,** கண்காணிப்பாளர்களாகிய இவ்விருவரின் அயராத உழைப்பினாலன்றி இச்சிறியப் புத்தகம் வெளியிடப்பெறுவது மிகக் கடினமாய் இருந்திருக்கும்.

**மானசா கங்கோத்ரி காட்டா,**
கூட்டு ஆணையர், இந்த புத்தகத்தை
வெளி கொண்டு வருவதில் உறுதியான ஆதரவுடன்
அன்போடு வழிகாட்டி துணை புரிந்தார்.

**G.ரவீந்திரநாத்,** ஆணையர் மற்றும்
எங்கள் தலைவர், அவர்களின் இடையறாத
மேற்பார்வையினாலன்றி இவ்வகராதி இத்துணை
குறுகிய காலத்தில் ஆக்கம் பெற்றிருக்காது.

**C.P.ராவ்,**
முதன்மைத் தலைமை ஆணையர்,
அவரது மதிப்புமிக்க கருத்துக்கள் மற்றும் ஆதரவை
இவ்வகராதியின்
வெளியீட்டிற்காக வழங்கினார்.

**S.ரமேஷ்,** முன்னாள் தலைவர்,
மைய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரியம் ,
அவர்கள் 24.11.2018
அன்று சரக்குகள் மற்றும்
சேவைகள் வரி இந்தி அகராதியின்
முதல் புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளும்
போது தமிழிலும் இவ்வகராதியை
வெளியிடுமாறு அறிவுரை வழங்கினார்.

**வடிவுக்கரசி .சி.**
**உதவி ஆணையர்**

# I Acknowledge ...

**A. S. Jegadeeswaran,** Inspector, who painstakingly and skillfully gleaned out Tamil equivalents of the English words and phrases that had been lined up from CGST Act and Rules.

**Abhishek Kumar,** Inspector, for his continuous efforts in communicating with the designer and printer to get this lexicon released on the proposed date and time.

**A. M. Chitra and A. Stanley Arokiaraj,** Superintendents, for their unhesitating and remarkably swift efforts in proof reading the primary draft and editing it.

**M. K. Madhivanan and Leema P. Jose,** our Superintendents, without whose tireless efforts this little book of lexicon would not have seen the light of the day.

**Manasa Gangotri Kata,**
Joint Commissioner,
whose steadfast support and
genial guidance in bringing out
this book is beyond measure.

**G. Ravindranath,**
Commissioner,
and our leader, without whose
assiduity this lexicon in Tamil
would not have got eventuated
for another year.

**C. P. Rao,**
Principal Chief Commissioner,
for his valuable comments and
unwearying support towards the
publication of this Lexicon.

**S. Ramesh,**
Ex-Chairman, CBIC,
who ushered in the idea of
bringing out this Tamil
Lexicon of Goods and Services
Tax while receiving the first copy
of the Hindi Lexicon of the same
on 24$^{th}$ November 2018.

**Vadivukarasi S.**
**Assistant Commissioner**

# குறிப்புகள்